தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

பொது சுகாதாரம் - மாநகராட்சிகள் நகராட்சிகள் (ம) பேரூராட்சிகளுக்கு தேவையான பிளீச்சிங்பவுடர், பினாயில் போன்ற பொருட்கள் வாங்குவதற்கான நடைமுறை குறித்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4)**

துறைஅரசாணை(ப)எண்.579 நாள் 18.12.2001

படிக்க

1. அரசாணை (ப) எண்.346 ந.நி.(ம)கு.வ.துறை நாள் 29.7.99
2. அரசுக்கடித எண்.13848/நநி3/2000-1 ந.நி.(ம)கு.வ.துறை நாள் 8.5.2000
3. பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் ந.க.எண்.4540/99 இ2 நாள் 9.1.2001
4. பேரூராட்சிகளின் இயக்குநர் கடித ந.க.எண்.4278/01 இ2 நாள் 5.3.2001
5. பேரூராட்சிகளின் இயக்குநர் கடித ந.க.எண்.4540/99 இ2 நாள் 15.3.2001

---

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு தேவையான பொது சுகாதாரப் பொருட்கள் 1999-2000ம் ஆண்டிற்கு விநியோகம் செய்வதற்கு மேற்படி பொருட்கள் விலை நிர்ணயம் செய்வது மற்றும் பொது சுகாதாரப் பொருட்கள் விநியோகம் செய்ய மாவட்ட அளவில் முகவர்களை நியமிப்பது சம்பந்தமாக குழு ஒன்று பேரூராட்சிகளின் இயக்குநர் தலைமையில் கீழ்கண்ட நபர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமையப்பட ஆணைகள் வெளியிடப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | பேரூராட்சிகளின் இயக்குநர் - | தலைவர் |
| 2. | நகராட்சி நிர்வாக ஆணையர் - | உறுப்பினர் |
| 3. | பொதுசுகாதாரதுறைத் இயக்குநர் அல்லது அவரது பிரதிநிதி - | உறுப்பினர் |
| 4. | இணைச்செயலர், நிதித்துறை - | உறுப்பினர் |
| 5. | ஆணையர், சென்னை மாநகராட்சி - | உறுப்பினர் |

2. மேலே படிக்கப்பட்ட கடிதம் இரண்டில் மேற்படி அரசாணையில் நியமிக்கப்பட்ட குழு பிளீச்சிங் பவுடர் மற்றும் பினாயல் மட்டுமின்றி கீழ்கண்ட பொருள்களுக்கும் விலை நிர்ணயம் செய்யும் எனவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

1. நீர்த்த சுண்ணாம்பு

2. சல்பேட் ஆப் அலுமினா

3. சோடியம் ஹைறபோகுளோரைடு

3. மேற்சொன்ன ஆணைகளின் அடிப்படையில் ஒரு வருட காலம் விநியோகம் செய்ய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் சந்தோசம் லைம் என்னும் நிறுவனம் சுண்ணாம்புத்தூள் சரிவர வழங்காமல் உள்ளது தொடர்பாக வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் முகாந்திரம் கோரும் அறிவிப்பு சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு முகாந்திரம் கேட்கப்பட்டது என்றும், மேற்படி முகாந்திரம் ஏற்புடையதாக இல்லை எனக் கருதி அன்னாரின் உரிமத்தை இரத்து செய்ய 22.12.2000 அன்று நடைபெற்ற விலை நிர்ணயக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்றும் தூத்துக்குடி சந்தோசம் லைம் நிறுவனத்தின் விநியோக உரிமத்தை ரத்து செய்து புதிய ஒப்பந்தப்புள்ளிகள் வாயிலாக புதிய விநியோக நிறுவனம் தேர்வு செய்யுவ்ஜ நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் விதிமுறைகளை கடைப்பிடித்து தேவையான சுண்ணாம்புத்தூள் வாங்கி கொள்ள அனுமதிக்க அரசினைக் கேட்டுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் பேருராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மேலும், விலை நிர்ணயக் குழுவால், 2001-2002ம் ஆண்டிற்கு தேவையான பொது சுகாதாரப் பொருட்கள் விநியோகம் செய்வதில் நடப்பு ஆண்டில் ஏற்பட்டுள்ள விநியோகப் பிரச்சினைகள் மாநிலம் முழுவதும் தரமுடைய பொருளாக குறிப்பிட்ட காலத்தில் விநியோகம் செய்வதில் ஏற்பட்ட பல்வேறு புகார்களின் அடிப்படையில் மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைப்பதற்கு பதிலாக மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களால் விநியோக உரிமையாளர்களை தேர்வு செய்வதற்கான ஆணை வழங்க அரசைக் கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது என்றும் பேரூராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். அத்துடன் நிறுவனங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தகாலம் வரும் 3.5.2001 உடன் முடிவடைகிறது என்றும், எனவே, 2001-2002ம் ஆண்டிற்கு அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொது சுகாதாரப் பொருட்கள் விநியோகம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு 3.5.2001க்குள் முடிவு எடுக்க வேண்டியுள்ளதால் 22.12.2000 அன்று நடைபெற்ற விலை நிர்ணயக்குழு கூட்ட நடவடிக்கைகளின்படி அனைத்து உள்ள்ாட்சி அமைப்புகளுக்கும் பொது சுகாதாரப் பொருட்கள் விநியோகம் செய்வதற்கு தக்க ஆணை வழங்குமாறும் பேரூராட்சிகள் இயக்குநர் கோரியுள்ளார். மேலும், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு செலவினமாக ரூ.6.60 இலட்சம் (ரூபாய் ஆறு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யவும் பேரூராட்சிகளின் இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. பேரூராட்சிகளின் இயக்குநரின் கோரிக்கையினை அரசு கவனமுடன் பரிசீலித்து கீழ்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கின்றது.

(அ) தூத்துககுடி சந்தோசம் லைம் என்னும் நிறுவனத்துககு ஏற்கனவே வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்து அந்நிறுவனத்தை அரசு தவறிழைத்தோர் பட்டியலில் (கூடிடயஉம டளைவ)சேர்த்து அந்நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட காப்புத் தொகையை (ளுநஉரசவைல னுநயீடிளவை) பறிமுதல் செய்ய ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(ஆ) அதைத் தொடர்ந்து சுண்ணாம்புத்தூள் கொள்முதல் செய்ய புதிய நிறுவனம், புதிய ஒப்பந்தப்புள்ளி குறித்து, முடிவெடுக்கும்வரை நகர்புற உள்ளாட்சி அமைப்புகள்

நடைமுறையிலுள்ள விதிமுறைகளைக் கடைப்பிடித்து தேவையான சுண்ணாம்புதூள் வாங்கிக் கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.

(இ) கடந்த ஆண்டைப்போன்றே வரும் ஆண்டிலும் மாநில அளவில் பிளீச்சிங் பவுடர், பினாயில், நீர்த்த சுண்ணாம்பு, சல்பேட் ஆப் அலுமினா, சோடியம் ஹைறபோ குளோரைட் ஆகியவற்றை வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி விலை நிர்ணயம் செய்ய கீழ்கண்ட உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பேரூராட்சிகளின் இயக்குநர் - | தலைவர் |
| 2. | நகராட்சி நிர்வாக ஆணையர் - | உறுப்பினர் |
| 3. | பொது சுகாதாரத்துறை இயக்குநர்(அ)அவரது பிரதிநிதி - | உறுப்பினர் |
| 4. | ஆணையர், சென்னை மாநகராட்சி - | உறுப்பினர் |
| 5. | நிதி ஆலோசகர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் - | உறுப்பினர் |

(ஈ) கடந்த முறை நிர்ணயிக்கப்பட்ட இதர நிபந்தனைகளையும் அறிவுரைகளையும் இம்முறையும் பின்பற்றப்படவேண்டும்.

(உ) மேற்படி குழு ஒப்பந்தப்புள்ளி கோருவது சம்மந்தமான விளம்பரம் செய்ய ரூ.6.60 லட்சம் (ரூபாய் ஆறு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்படுவதுடன், இச்செலவினை மேற்கொள்ள குழுவின் தலைவரான பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுமதியும் வழங்கப்படுகிறது.

(ஊ) இச்செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும். ( 2515.00 ஏனைய ஊரக வளர்ச்சித்திட்டங்கள்-001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் 1 திட்டத்தில் சேராதது ஸ்ரீ ஹஐ பேரூராட்சி இயக்ககம் - 08 விளம்பரமும், பிரச்சாரமும் . த.தொ.கு.எண்.2515-00-001-ஹஐ 0800)

6. பத்தி 5(2)ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்திற்கு தேவையான நிதியொதுக்கம் திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு 2001-2002ல் சேர்க்கப்படலாம். மேற்படி ஒப்பளிப்பு செய்த தொகையை சேர்த்து சம்மந்தப்பட்ட விரிவான கணக்குத் தலைப்பிற்கு திருத்திய மதிப்பீடு/இறுதி மாற்ற ஒதுக்கீடு 2001-2002ம் ஆண்டிற்கு கருத்துரு அரசுக்கு அனுப்ப பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு 2001-2002ல் சேர்ப்பதற்கு உட்பட்டு ரூ.6.60 லட்சம் (ரூபாய் ஆறு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) பெறுவதற்கு பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.89570/நிதி (ந.நி.(ம)கு.வ)/2001 நாள் 14.12.2001ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சாந்தா ஷீலா நாயர்,
அரசு செயலாளர்

பெறுநர்

பேரூராட்சிகளின் இயக்குநர், குறளம், சென்னை 108
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 5
ஆணையர் சென்னை மாநகராட்சி, சென்னை 3
இயக்குநர், பொது சுகாதாரத்துறை சென்னை 6
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
இயக்குநர், உள்ளாட்சி நிதிக்கணக்கு, சென்னை 108
அனைத்து கருவூல அலுவலர்கள்,
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழகுகு) சென்னை 5
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு) சென்னை 79
மாநில கணக்காயர், சென்னை 18/35 (பெயரிட்ட உறையில்)

நகல்

நிதி ஆலோசகர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை 5
ந.நி.(ம) கு.வ.துறை செயலரின் தனிச் செயலர், சென்னை 9
நிதித்துறை செயலரின் தனிச் செயலர், சென்னை 9
ந.நி.(த) கு.வ.(பேரூ.1)/மாந1/மா2/பொது துறை சென்னை 9
நிதி (ந.நி.(ம) கு.வ.)துறை சென்னை 9
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர் சென்னை 9
செயலர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
இ.கோ.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ஓம்/-
பிரிவு அலுவலர்.